S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 343 05.06.2026 FRIDAY VAIKASI : 22 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 343 05.06.2026 வெள்ளிக்கிழமை வைகாசி : 22 விலை : ரூ.5/-

# "தூர சக்தியை காக்க பேர சக்தி முயற்சியா?"

## ஹார்டு டிஸ்க் விவகாரத்தில் இபிஎஸ் கேள்வி

சென்னை, ஜூன்.5-

"தூயசக்தி என்று சொல்லிக்கொள்ளும் ஆட்சியில் டெண்டர் தொடர்பான தரவுகள் காணாமல் போயிருப்பதை என்னவென்று எடுத்துக்கொள்ள வேண்டும்?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "மின்துறை தலைமை அலுவலகத்தில் முக்கிய விவரங்கள் அடங்கிய 18 ஹார்டு டிஸ்குகள் காணவில்லை என செய்திகள் வருகின்றன.



தூயசக்தி என்று சொல்லிக்கொள்ளும் ஆட்சியில் டெண்டர் தொடர்பான தரவுகள் காணாமல் போயிருப்பதை என்னவென்று எடுத்துக்கொள்ள வேண்டும்?

நடு இரவில் திருடர்கள் வந்து திருட, இது என்ன மந்தையில் இருக்கும் ஆடா? கண்டிப்பாக, இந்த திருட்டில் ஏதோ ஒரு உள்நோக்கம், யாரையோ காப்பாற்றும் சதி இருக்கிறது என உறுதியாக சொல்லலாம்.

தூர சக்தி, ஓர சக்தி என்று சொன்ன கட்சியை காப்பாற்ற முயல்கிறதா இந்த பேர சக்தி?

ஹார்டு டிஸ்குகள் திருட்டு குறித்து முறையான சிபிஐ விசாரணை நடத்தப்பட்டு, உண்மை வெளிவர வேண்டும்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தவெக அரசு நடவடிக்கை எடுக்காது என குற்றவாளிகள் துணிச்சலில் உள்ளார்களா? : கனிமொழி கேள்வி



சென்னை, ஜூன்.5-

"தமிழக பெண்கள் பீதியில் உறைந்து போய் இருக்க, எதற்குமே பொறுப்பேற்காத தவெக அரசு, என்னவானாலும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்ற துணிச்சலில் தான் குற்றவாளிகள் ஊருக்குள் சுற்றித் திரிகிறார்களா என்ற கேள்வி எழுகிறது" என திமுக எம்.பி கனிமொழி குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "திருச்சி கீழப்புலிவார் ரோடு பகுதியில் 14 வயது சிறுமி, கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

தொடரும் இதுபோன்ற குற்றச் சம்பவங்களால் தமிழ்நாட்டுப் பெண்கள் பீதியில் உறைந்து போய் இருக்க, எதற்குமே பொறுப்பேற்காத இந்த தவெக அரசு, என்னவானாலும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்ற துணிச்சலில் தான் குற்றவாளிகள் ஊருக்குள் சுற்றித் திரிகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

காவல்துறைக்குப் பொறுப்பு(?) வகிக்கும் முதல்வர் விஜய், என்னவானாலும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து தொடரும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் குறித்து விளக்கமளிக்கப் போவதில்லை என்று தெரிந்துவிட்டது. குறைந்தபட்சம் துறைசார் அதிகாரிகளாவது மக்கள் முன் விளக்கமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

## திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றுவதில் அரசின் நிலைப்பாடு என்ன? : ஐகோர்ட் கேள்வி

மதுரை, ஜூன்.5-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன? என நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணியில் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதிக்கக்கோரி மதுரை எழுமலையைச் சேர்ந்த ராமரவிக்குமார் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவை தனி நீதிபதி விசாரித்து, மலை உச்சியில் இருப்பது தீபத்தூண் தான். கார்த்திகை நாளில் தீபத்தூணில் தீபம் ஏற்றலாம் என உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு நிறைவேற்றப்படாத நிலையில் மதுரை மாவட்ட ஆட்சியர், மதுரை மாநகர் காவல் ஆணையர், கோயில் செயல் அலுவலருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்களை விசாரித்து தனி நீதிபதி பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்தார். இந்நிலையில் தனி நீதிபதி பிரதான மனுவில் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராகவும், நீதிமன்ற அவமதிப்பு வழக்களில் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிராகவும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அரசு சார்பிலும், அதிகாரிகள் தரப்பிலும் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு தனி நீதிபதியின் அனைத்து உத்தரவுகளுக்கும் இடைக்கால தடை விதித்தனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், அவமதிப்பு வழக்குகள் ஒரு பக்கம் இருக்கட்டும். தனி நீதிபதியின் உத்தரவை நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாமே? இது ஜனநாயக நாடு. மக்கள் உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டும். நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் என்ன சிக்கல் உள்ளது? என கேள்வி எழுப்பினர்.

அரசுத் தரப்பில், உயர் அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்த வேண்டியதுள்ளது எனக் கூறப்பட்டது. தர்கா தரப்பில் தங்களையும் வழக்கில் சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்பதில் தமிழக அரசின் முடிவு என்ன? என்பதை நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும். தர்கா தரப்பு எதிர்மனுதாராக சேர்க்கப்படுகிறது. தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட தடை நீட்டிக்கப்படுகிறது. அடுத்த விசாரணை ஜூன் 22க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

## "கேமரா முன் முழங்குவதால் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதியாகாது" : நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூன்.5-

"சின்னஞ்சிறு சிறுமிகளின் பாதுகாப்பைக் கைகழுவி விட்டு, கேமராவைக் கண்டதும் சிங்கம் போல முழங்குவதால் எந்தப் பயனும் இல்லை. முதல்வர் விஜய் தமிழக பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தூங்காமல் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய், தூய சக்தி பாப்பா. மாற்று சக்தி தவெக ஆட்சி பொறுப்பேற்ற பின்னும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து அரங்கேறி வரும் நிலையில், நேற்று திருச்சி மாவட்டம் கீழப்புலிவார்ரோடு பகுதியில் 14 வயது சிறுமி ஒருவரும், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் 17 வயது சிறுமி ஒருவரும் கடத்தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதிலும், தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்லும் போர்வையில், இரண்டு நாட்களுக்கு முன் முதல்வர் விஜய் வெற்று விளம்பர உரையாற்றிய அதே திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் சிறுமி கடத்தப்பட்டுள்ள சம்பவம், தவெக அரசின் நிர்வாகத் திறனை கேள்விக் குறியாக்குகிறது. சின்னஞ்சிறு சிறுமிகளின் பாதுகாப்பைக் கைகழுவி விட்டு, கேமராவைக் கண்டதும் சிங்கம் போல முழங்குவதால் எந்தப் பயனும் இல்லை. எனவே, முதல்வர் விஜய் சட்டம் ஒழுங்கை சரிவரப் பேணி, உடனடியாக தமிழக பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## "தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த திட்டங்களை சரியாக செயல்படுத்தினாலே போதும்" : பிரேமலதா

விருதாச்சலம், ஜூன்.5-

"தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை பீக்கில் சென்று கொண்டிருக்கிறது. தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த திட்டங்களை சரியாக செயல்படுத்தினாலே, மக்கள் அனைத்தையும் பெற முடியும்," என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தேர்தல் கால பிரச்சாரத்தைப் போல் இல்லாமல், ஆக்கப்பூர்வமாக முதல்வர் விஜய் செயல்பட வேண்டும். பெண்கள், விவசாயிகளுக்கு பிரச்சினை, குறிப்பாக, தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை பீக்கில் சென்று கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த திட்டங்களை சரியாக செயல்படுத்தினாலே, தமிழக மக்கள் அனைத்தையும் பெற முடியும். விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்படும் எனச் சொன்னார்கள்.



ஆனால் விவசாயிகள் யாராவது மகிழ்ச்சியாக இருக்கின்றார்களா?

தமிழகத்தின் நிதி நிலையை பார்த்துவிட்டு தான் நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை மட்டுமே தர வேண்டும். ஆட்சிக்கு வந்த பிறகு மக்கள் இதைப் பற்றி கேள்வி கேட்கத் தான் செய்வார்கள். விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். இதுதான் அடித்தட்டு மக்களுக்கு நாம் செய்யும் உதவி.

ரேசன் பொருட்கள் வீடு தேடி வரும் என சொன்னார்கள்; ஆனால் அது முறையாக செயல்படுகிறதா என்பதே கேள்விக்குறி. நான் நேற்று என் தொகுதி முழுக்க சென்று பார்த்தேன். அப்போது எந்த மதுபானக் கடையும் மூடப்படவில்லை ; இது கண்துடைப்பு என மக்கள் என்னிடம் சொல்கிறார்கள்.

பெண்கள், சிறு குழந்தைகள் வரை அனைவரும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். எனவே சிங்கப்படை திட்டத்தை சீக்கிரம் அமைக்க வேண்டும். தவெக அரசு மக்களுக்கு நல்லது செய்யக்கூடிய ஆட்சியாக இருக்க வேண்டும். தவெக அரசின் செயல்பாடுகளை பொறுத்திருந்து பார்ப்போம். வரும் காலங்களில் அமைச்சர்களும், ஆட்சியாளர்களும் சிறந்த முறையில் செயல்பட வேண்டும். ஓட்டு போட்ட, போடாத அனைவருக்கும் நடுநிலையோடு பேசக்கூடிய முதல்வராக விஜய் இருக்க வேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.

## காங்கிரஸ் பங்கேற்கும் இந்தியா கூட்டணி ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் : திமுக அறிவிப்பு

சென்னை, ஜூன்.5-

இந்தியா கூட்டணி ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என்று திமுக அறிவித்துள்ளது. ஜூன் 8இல் டெல்லியில் நடைபெறும் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்த நிலையில் திமுக புறக்கணித்துள்ளது. காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம். மற்ற கட்சிகள் முன்வைக்கும், நாட்டு நலனைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு என்றைக்கும் குரல் கொடுப்போம்

டெல்லி "கான்ஸ்டிடியூஷன் கிளப்பில்" வருகின்ற ஜூன் 8ஆம் தேதி நடைபெறும் "இந்தியா" கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்திற்கு வருமாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"இந்தியா" கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மையச் சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் நாட்டு மக்களுக்கான முக்கியப் பிரச்சினைகளில் முதன்மைக் குரல் எழுப்பி வந்தார். இது இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளும் அக்கட்சிகளின் தலைவர்களும் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காயமுற்றிருக்கும் கழகத் தோழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், வருகின்ற ஜூன் 8ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் "இந்தியா" கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது.உள்ளூர் செய்திகள்

இக்கூட்டத்தில் பங்கேற்காத அதேநேரத்தில் இந்தக் கூட்டத்தில் இடம்பெற்றுள்ள மற்ற கட்சிகள் முன்வைக்கும் நாட்டு நலனைப் பாதிக்கும் பிரச்சினைகளில், திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் குரல் கொடுக்கும்.

# "கர்நாடக அமைச்சராக ஒரு பெண்கூட பதவியேற்காதது ஏமாற்றமளிக்கிறது" மார்கரெட் ஆல்வா



பெங்களூரு, ஜூன்.5-
டி.கே.சிவகுமார் தலைமையில் நேற்று அமைந்த புதிய அமைச்சரவையில் ஒரு பெண்கூட இல்லாதது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் மார்கரெட் ஆல்வா அதிருப்தி தெரிவித்துள்ளார்.
கர்நாடக மாநிலத்தின் 25வது முதல்வராக டி.கே.சிவகுமார் பெங்களூருவில் நேற்று மாலை பதவியேற்றார். துணை முதல்வராக ஜி.பரமேஸ்வராவும், அமைச்சர்களாக கே.ஹெச். முனியப்பா, கே.ஜே. ஜார்ஜ், எம்.பி.பாட்டீல், ராமலிங்க ரெட்டி, சத்தீஷ் ஜரகிஹோலி, கிருஷ்ணா பைரேகவுடா, பிரியங்க் கார்கே, யு.டி.காதர், ஈஸ்வர் கந்தரே, யதீந்திர சித்தராமையா, பைரதி சுரேஷ், ஷரண் பிரகாஷ் பாட்டீல் ஆகியோரும் பதவியேற்றனர்.முதல்வர் டி.கே.சிவகுமாரின் தலைமையிலான இந்த அமைச்சரவையில் ஒருவர் துணை முதல்வராகவும், 12 பேர் அமைச்சர்களாகவும் பதவியேற்ற நிலையில் இவர்களில் ஒருவர்கூட பெண் இல்லை.இது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள மூத்த காங்கிரஸ் தலைவர் மார்கரெட் ஆல்வா, "கர்நாடக முதல்வராக பதவியேற்றுள்ள டி.கே. சிவகுமாருக்கு வாழ்த்துகள். அவருக்கும் அவரது குழுவினருக்கும் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன். பதவியேற்ற புதிய கர்நாடக அமைச்சரவையில் குறைந்தபட்சம் ஒரு பெண்ணாவது இருப்பார் என எதிர்பார்த்திருந்தேன். ஒருவர்கூட இல்லாதது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது" என தெரிவித்துள்ளார்.
கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 4 பெண் எம்எல்ஏக்களும் 5 பெண் எம்எல்சிகளும் உள்ளனர். இவர்களில், உமாஸ்ரீ, லட்சுமி ஹெப்பால்கர் ஆகியோர் அமைச்சர்களாக இருந்து அனுபவம் பெற்றவர்கள். இருந்தும் ஒருவரும் அமைச்சரவையில் சேர்க்கப்படவில்லை. எனினும், விரைவில் நடைபெற உள்ள அமைச்சரவை விரிவாக்கத்தின்போது பெண் உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. டி.கே.சிவக்குமாரால் அதிகபட்சமாக 34 அமைச்சர்களை நியமிக்க முடியும். அந்த வகையில் இன்னும் 21 பேர் அமைச்சர்களாக வாய்ப்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏர் இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடம் ரூ.1,601 கோடிக்கு வாங்கியது மகாராஷ்டிர மாநில அரசு



மும்பை,ஜூன்.5-
தெற்கு மும்பையின் வரலாற்று அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் புகழ்பெற்ற 'ஏர் இந்தியா' பலமாடிக் கட்டடத்தை, மகாராஷ்டிர மாநில அரசு ரூ.1,601 கோடிக்கு முறைப்படி வாங்கியுள்ளது.
மகாராஷ்டிர மாநிலத் தலைமைச் செயலகமான மந்த்ராலயாவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு, முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் முன்னிலையில் இதற்கான ஒப்பந்தப் பரிமாறிக் கொள்ளப்பட்டது. ஏர் இந்தியா அஸெட்ஸ் ஹோல்டிங் நிறுவனம் (ஏஐஏஹெச்எல்) மற்றும் மாநிலப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் இதில் கையெழுத்திட்டதாக அரசுத் தரப்பு அதிகாரப்பூர்வ செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.
தெற்கு மும்பையின் நரிமன் பாயிண்ட் பகுதியில், கடலை நோக்கியவாறு அமைந்துள்ள இந்த 23 மாடி வணிகக் கட்டிடம், மாநில அரசுக்குச் சொந்தமான நிலத்தில் கடந்த 1974ம் ஆண்டு கட்டப்பட்டது. ஆரம்ப காலகட்டங்களில் இதன் அதிநவீன மின்தூக்கிகளில் பயணிப்பதற்காகவே பொதுமக்கள் அதிக அளவில் திரண்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க மும்பையின் முக்கிய அடையாளமாக இக்கட்டிடம் விளங்கி வருகிறது. ஏர் இந்தியா நிறுவனம் தனியார்மயமாக்கப்பட்டு, அதனை டாடா குழுமம் வாங்கிய பிறகு, நிறுவனத்தின் முதன்மை அல்லாத சொத்துக்கள் அனைத்தும் மத்திய அரசின் ஏர் இந்தியா அஸெட்ஸ் ஹோல்டிங் லிமிடெட் அமைப்பின் வசம் ஒப்படைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. தெற்கு மும்பையில் உள்ள தலைமைச் செயலகத்துக்கு அருகில் அரசு அலுவலகங்களை அமைப்பதற்குக் கடுமையான இடநெருக்கடி நிலவி வந்ததால், இந்த இடத்தை வாங்குவதற்கு மகாராஷ்டிர அரசு கடந்த 2021ம் ஆண்டு முதல் பேச்சு வார்த்தை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

# பிஹார் தனியார் மருத்துவமனையில் தீ விபத்து 4 பேர் உயிரிழப்பு; 20 பேர் படுகாயம்



பாட்னா, ஜூன்.5-
பிஹார் மாநிலம் முசாபர்பூர் நகரில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 20 பேர் காயமடைந்தனர்.
பிஹார் மாநிலம் முசாபர்பூர் நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் இன்று காலை தீ விபத்து ஏற்பட்டது. மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஏற்பட்ட தீ விபத்து பின்னர் கட்டிடம் முழுவதும் வேகமாக பரவியது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீ அணைப்புத் துறையினர், நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.
தீ விபத்துக்கான காரணம் குறித்து தற்போது விசாரணை நடைபெற்று வருவதாகவும், மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் மூத்த காவல் கண்காணிப்பாளர் காந்தேஷ் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.
தீ விபத்து சம்பவம் குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாநில சுகாதாரத் துறை அமைச்சர் நிஷாந்த் தெரிவித்துள்ளார். விபத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.
இந்த துயரச் சம்பவம் குறித்து ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் சாம்ராட் சவுத்ரி, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "முசாபர்பூரில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 பேர் உயிரிழந்தது மிகவும் துயரமான நிகழ்வு. அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடையவும், இந்த துயரமான நேரத்தில் அவர்களின் குடும்பத்தினர் துயரை தாங்கும் மனவலிமையை இறைவன் வழங்கவும் பிரார்த்திக்கிறேன்.
உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணத்தொகையை உடனடியாக வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாவட்ட மருத்துவமனைகளில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என தெரிவித்துள்ளார்.
டெல்லியில் உள்ள ஒரு ஓட்டலில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்த நிலையில், இன்று முசாபர்பூரில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

# குவைத் விமான நிலையம் மீது ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் இந்தியர் உயிரிழப்பு



குவைத் சிட்டி, ஜூன்.5-
அமெரிக்கா ஈரான் இடையேயான சண்டை நிறுத்தத்துக்குப்பின் நேற்று இரு நாடுகள் இடையே மிகப் பெரியளவில் மோதல் வெடித்தது. இதில் குவைத் விமான நிலையம் தாக்கப்பட்டதால், அங்கு இந்தியர் ஒருவர் உயிரிழந்தார்.
அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஈரான் மறுத்ததால் அந்நாட்டின் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இதில் ஈரானின் ராணுவத் தளங்கள் பல சேதம் அடைந்தன. இந்நிலையில் இரு நாடுகள் இடையே கடந்த ஏப்ரல் மாதம் போர் நிறுத்தம் ஏற்பட்டது.
செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க ஈரான் முன்வராததால், போர் நிறுத்தம் ஏற்படாமல் இருந்தது. இந்நிலையில் அமெரிக்க ட்ரோன் ஒன்றை ஈரான் சுட்டு வீழ்த்தியது. இதற்கு பதிலடியாக ஈரானின் 2 தீவுகளில் உள்ள வான் பாதுகாப்பு ரேடார் மற்றும் தொலை தொடர்பு கோபுரத்தை அமெரிக்கப்படை சில நாட்களுக்கு முன் தகர்த்தது. இதனால் இரு நாடுகள் இடையே மீண்டும் போர் ஏற்படும் சூழல் நிலவியது.இச்சூழலில் ஈரானின் எண்ணெய் கப்பல் ஒன்று ஈரான் நோக்கி சென்றது. அந்த கப்பல் மீது அமெரிக்கப்படை ஏவுகணை தாக்குதல் நடத்தி முடக்கியது. அமெரிக்க படைகள் குவைத் மற்றும் பஹ்ரைனில் இருந்து ஈரான் மீது தாக்குதல் நடத்துவதால் அந்நாடுகள் மீது ஈரான் நேற்று ஏவுகணை மற்றும் ட்ரோன்களை ஏவி பதிலடி கொடுத்தது. குவைத் சர்வதேச விமான நிலையத்தின் முதல் முனையத்தில் நடைபெற்ற ட்ரோன் தாக்குதலில் இந்தியர் ஒருவர் உயிரிழந்தார். 63 பேர் காயமடைந்தனர்.
இதையடுத்து குவைத் தனது வான் வெளியை மூடியது. குவைத் நோக்கி வந்த விமானங்கள் வேறு இடங்களுக்கு திருப்பி விடப்பட்டன. உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், காயமடைந்தவர்களுக்கும் தேவையான உதவி அளிக்கப்படும் என இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. இச்சம்பவத்தால் இண்டிகோ நிறுவனம் குவைத் விமான சேவையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. பயணிகள் தங்கள் முழு கட்டணத் தொகையை திரும்ப பெறலாம். அல்லது குவைத்துக்கு மீண்டும் விமான போக்குவரத்து தொடங்கியவுடன் பயணம் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.பஹ்ரைன் மீது தாக்குதல்பஹ்ரைன் மீது ஈரான் 3 ஏவுகணைகள் மற்றும் ஏராளமான ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இவை அனைத்தும் நடுவானில் அழிக்கப்பட்டன. அமெரிக்க படைகளை தங்கள் நாட்டில் இருந்து செயல்பட குவைத் மற்றும் பஹ்ரைன் அரசு அனுமதி அளித்துள்ளதால், அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் கூறியுள்ளது.



# காலை உணவுத் திட்டத்தின் ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் மேலும் 3 மாதம் ஒப்பந்தம் நீட்டிப்பு: தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, ஜூன்.5-
காலை உணவுத் திட்டத்தின் ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் மேலும் 3 மாதம் ஒப்பந்தத்தை நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்தபோது பல ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்கள் முடிவடைந்தது. அடுத்த 3 மாதத்துக்குள் புதிய டெண்டர்கள் கோரப்பட்டு புதிய ஒப்பந்ததார்கள் தேர்வு செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது



# எஸ்.ஜே.சூர்யா படத்தின் படப்பிடிப்பில் சிலிண்டர் வெடித்து தொழில்நுட்ப கலைஞர் உயிரிழப்பு

சென்னை, ஜூன்.5-
எஸ்.ஜே.சூர்யாவின் புதிய படத்தின் படப்பிடிப்பின் போது, சிலிண்டர் வெடித்து தொழில்நுட்ப கலைஞர் உயிரிழந்தார். திரைப்பட இயக்குநரும், நடிகருமான எஸ்.ஜே.சூர்யா, 10 வருடங்களுக்கு முன்பு 'இசை' என்ற படத்தை இயக்கி நடித்திருந்தார்.
இப்படம் எதிர்பார்த்த வெற்றியை பெறாததால், அதற்கு பிறகு நடிப்பில் மட்டும் கவனம் செலுத்த தொடங்கினார். தற்போது, அவர் 'கில்லர்' என்ற படத்தை இயக்கி நடிக்கிறார். இதில், ப்ரீத்தி அஸ்ராணி நாயகியாக நடிக்கிறார். ஸ்ரீகோகுலம் மூவிஸ் நிறுவனத்துடன் இணைந்து, ஏஞ்சல் ஸ்டுடியோஸ் தயாரிக்கிறது. இப்படத்தில், காருக்கு முக்கியத்துவம் இருப்பதால், ஜெர்மனியிலிருந்து புதிய பிஎம்டபிள்யூ கார் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
தமிழ், தெலுங்கு, இந்தி உள்பட 5 மொழிகளில் உருவாகும் இந்தப் படத்துக்காக சென்னை, பெரம்பூரிலுள்ள பின்னி மில்லில் செட் அமைத்து படப்பிடிப்பு நடந்து வருகிறது.இந்நிலையில், நேற்று அதிகாலை 3.30 மணியளவில் நெருப்பு வளையத்துக்குள் நின்று சண்டையிடுவது போன்ற காட்சியை படமாக்குவதற்காக பெரிய சிலிண்டரிலிருந்து மற்றொரு சிறிய சிலிண்டருக்கு கார்பன் டை ஆக்சைடு வாயுவை பணியாளர்கள் மாற்றிக் கொண்டிருந்தனர்.அப்போது, பயங்கர சத்தத்துடன் சிலிண்டர் வெடித்தது. 10க்கும் மேற்பட்டோர் காயம் இதில், தொழில்நுட்ப கலைஞராக பணியாற்றி வந்த மதுரவாயலை சேர்ந்தவர்களான மதன் (25), சூர்யா (23), நெற்குன்றம் தினகரன் (24), குன்றத்தூர் சக்திவேல் (27), உத்திரபிரதேசத்தை சேர்ந்த ராம் பாண்டே (34) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். பத்துக்கும் மேற்பட்டோருக்கு சிறிய அளவில் காயங்கள் ஏற்பட்டன.இவர்களில் படுகாயம் அடைந்த 5 பேர் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி மதன் உயிரிழந்தார். 4 பேருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து தொடர்பாக, ஓட்டேரி காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# குறைவாக இருக்கும் நீர்மட்டம்.! ஜூன் 12 மேட்டூர் அணை திறக்கப்படுமா?




மேட்டூர், ஜூன்.5-
நீர்மட்டம் குறைவாக இருப்பதன் காரணமாக வரும் ஜூன் 12ஆம் தேதி ஏற்கனவே திட்டமிட்டபடி மேட்டூர் அணையை திறப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் காவிரி பாசனத்தை சார்ந்திருக்கும் மாவட்ட விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.
மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் அணையின் நீர்மட்டம் குறைவாக இருப்பதாலும், கர்நாடக மாநிலத்தில் இருந்து போதிய அளவு தண்ணீர் திறக்கப்படாததாலும் இந்த ஆண்டு ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். அணையின் இருப்பு 50 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பதுடன், தென்மேற்குப் பருவமழை சற்று தாமதமாக துவங்கி இருப்பது மற்றும் கர்நாடகத்திடமிருந்து உரிய பங்கீட்டு நீர் கிடைக்காதது போன்றவற்றை இந்த ஆண்டு தண்ணீர் திறப்பு தள்ளி போக கூடும் என அதிகரிகள் கூறுகின்றனர். இதனிடையே காவிரி டெல்டா பாசன பகுதிகளில் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் தேவை அதிகமாக உள்ளதால், நீர் இருப்பு நிலவரத்தை பொறுத்து தமிழக அரசு உரிய முடிவை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

# கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கியது: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு



புதுடெல்லி, ஜூன்.5-
தென்மேற்கு பருவமழை கேரளாவில் இன்று (ஜூன் 4) தொடங்கியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமான சூழல் அதிகரித்து வருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் சமீபத்தில் கூறி இருந்தது. இந்நிலையில், கேரளாவில் தென்மேற்கு பருவமழை இன்று (ஜூன் 4) தொடங்கியுள்ளது. இதனால் மாநிலத்தின் பல பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. விவசாயிகளும், பொதுமக்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
நாட்டின் பல பகுதிகளிலும் கோடை வெயில் வாட்டி வதைத்து வரும் நிலையில், தென்மேற்கு பருவமழை தொடங்கி இருப்பது வெயிலின் தாக்கத்தை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளாவில் இன்று தொடங்கியுள்ள தென்மேற்குப் பருவமழை, வழக்கம்போல் பல கட்டங்களாக வடக்கு நோக்கி நகர்ந்து ஜூலை 15 தேதிக்குள் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையை அளிக்கும்.
விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய பொருளாதாரத்துக்கு பருவமழை மிகவும் முக்கியம் என்பதால் இதன் வருகை உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. வேளாண் அமைச்சக தகவல்களின்படி நாட்டின் சாகுபடி நிலங்களில் கிட்டத்தட்ட 51% மழை நீரை நம்பியுள்ளன. நாட்டின் விவசாய உற்பத்தியில் 40% பங்களிப்பை இது வழங்குகிறது. நாட்டின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் வாழ்வாதாரத்துக்காக விவசாயத்தை சார்ந்துள்ளதால் கிராமப்புற வருமானம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு பருவமழை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.3 நாட்கள் தாமதம்:தென்மேற்கு பருவமழை, வழக்கமாக தொடங்கும் நாளில் இருந்து 3 நாட்கள் தாமதமாக தொடங்கி இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு பசுபிக் பெருங்கடலில் உருவாகி வரும் ஒரு புயல், லட்சத்தீவுக்கு அருகில் உள்ள ஒரு சூறாவளியின் சுழற்சி ஆகியவையே தாமதத்துக்குக் காரணம் என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
மேற்கு பசுபிக் பெருங்கடலில் உருவாகி வரும் புயல், அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் இருந்து ஈரப்பதத்தை ஈர்த்துச் சென்றதாகவும், இதன் காரணமாகவே பருவமழைக்கான வாய்ப்பு தள்ளிப்போனதாகவும் வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
அடுத்த சில நாட்களுக்கு கேரளா முழுவதும் ஆங்காங்கே கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யும் என்றும், தமிழ்நாடு மற்றும் கர்நாடகத்தின் சில பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இந்தியாவின் வடமேற்கு பகுதி, மத்திய பகுதி, கிழக்குப் பகுதி, தென்னிந்தியா ஆகிய பகுதிகளில் பலத்த காற்றுடன் இடியுடன் கூடிய மழை பெய்யவும் வாய்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவுக்கு 12.5% புதிய வரி விதித்த அமெரிக்கா 'இது இறுதி அல்ல' என இந்தியா விளக்கம்


வாஷிங்டன்/புதுடெல்லி, ஜூன்.5-



கட்டாயத் தொழிலாளர் முறையைத் தடுக்கத் தவறியதாகக் கூறி, இந்தியா, சீனா, பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட 54 நாடுகள் மீது 12.5% புதிய வர்த்தக வரிகளை விதிப்பதற்கான பரிந்துரையை அமெரிக்கா நேற்று வழங்கியது. அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியின் (யுஎஸ்டிஆர்) 'செக்சன் 301' சட்டப் பிரிவின் கீழான விசாரணைக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.இந்தியா மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு இடையே டெல்லியில் மிக முக்கியமான வர்த்தகப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் வேளையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. அதே வேளையில், கட்டாயத் தொழிலாளர் இறக்குமதியைத் தடுக்க அமெரிக்காவுடன் பரஸ்பர வர்த்தக ஒப்பந்தத்தில் இணையச் சம்மதித்துள்ள பாகிஸ்தான், ஐரோப்பிய யூனியன், கனடா உள்ளிட்ட 6 நாடுகளுக்கு 10 சதவீதக் குறைந்தபட்ச வரியை அமெரிக்கா பரிந்துரைத்துள்ளது.இதற்கிடையே, இந்த வரி விதிப்புக் கொள்கை குறித்துப் பேசிய இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம், அமெரிக்காவின் இந்த வரி விதிப்புப் பரிந்துரை இன்னும் இறுதியான ஒன்றாக மாறவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது. இது தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்ட கூட்டு உடன்படிக்கையின்படி, இரு நாடுகளுக்கும் இடையே கட்டமைப்பு ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் இந்தியா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.வரும் ஜூன் 22ம் தேதி வரை பொதுமக்கள் மற்றும் வர்த்தகப் பங்களிப்பாளர்கள் இது குறித்த பொது விசாரணையில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம் என்றும், ஜூலை 6 வரை எழுத்துப்பூர்வமான கருத்துக்களைச் சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 7 அன்று நடைபெறும் பொது விசாரணைக்குப் பிறகே அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி இதில் இறுதி முடிவை எடுப்பார் என்று அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்க உச்ச நீதிமன்றம், ட்ரம்ப் நிர்வாகம் விதித்திருந்த சில பரஸ்பர வரிகளைச் செல்லாது என அறிவித்ததால் முந்தைய வர்த்தக ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வ அந்தஸ்தை இழந்தன. அதனை ஈடுகட்டவே தற்போது மிக சக்திவாய்ந்த 'செக்சன் 301' சட்டப் பிரிவை அமெரிக்கா கையில்எடுத்துள்ளது.1995ல் உலக வர்த்தக அமைப்பு உருவாவதற்கு முன்பு, ஐரோப்பா மற்றும் ஜப்பானுக்கு எதிராக அமெரிக்கா இதைப் பயன்படுத்தியது. தற்போது உலக வர்த்தக அமைப்பு பலவீனமடைந்து வரும் சூழலில், ட்ரம்ப் நிர்வாகம் மீண்டும் இந்த கடுமையான சட்டத்தை கையிலெடுத்துள்ளது.

# போதை கும்பல் தாக்குதலை கண்டித்து பெட்ரோல் பங்க்குகளை ஒருநாள் மூடி போராட்டம்: உரிமையாளர்கள் சங்கம் முடிவு

சேலம், ஜூன்.5-



தூத்துக்குடி மாவட்டத்தில் பெட்ரோல் பங்க்கில் போதை கும்பல் தாக்குதல் நடத்தியதை கண்டித்து, பெட்ரோல் பங்க்குகளை மூடி ஒரு நாள்வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக சங்க நிர்வாகி தெரிவித்துள்ளார். தமிழகத்தில் பொது துறை எண்ணெய் நிறுவனங்களில் 7000பெட்ரோல் பங்குகளை டீலர்கள் நடத்துகின்றனர். தூத்துக்குடி மாவட்டம் கீழ் அரசடியில் உள்ள இந்தியன் ஆயில் பங்க்கில் கடந்த 30ம் தேதி ஆயுதம் ஏந்திய கும்பல் தாக்குதல் நடத்தியது.அவர்கள் மீத நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, பெட்ரோலிய டீலர்கள் ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் நடத்த முடிவு செய்தள்ளனர். இதுகுறித்து தமிழக பெட்ரோலிய டீலர்கள் சங்க துணை தலைவரும், சேலம் மாவட்ட தலைவருமான செல்வராஜ் கூறியதாவது: தூத்துக்குடி மாவட்டம் கீழ்அரசடி பெட்ரோல் பங்க்கிற்கு வந்த போதை கும்பல் எளிதில் தீப்பற்றக்கூடிய எரிபொருள் வினியோகிக்கும் பங்க் அருகில் சிறுநீர் கழித்ததுடன் ஊழியர் மீது எச்சிலை உமிழ்ந்துள்ளது. இந்த சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்திற்குள் 10 பேர் கும்பல் மோட்டார்சைக்கிளில் வந்து கத்தி, பாட்டிலுடன் வன்முறையில் ஈடுபட்டனர். இது ஒரு பங்க்கில் நடந்த சாதாரண சட்டம் ஒழுங்கு பிரச்னை அல்ல. பெட்ரோல் பங்க்குகள் மிகவும் ஆபத்தான எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை கையாளும் பாதுகாப்பு விதிதுறைகளின் கீழ் இயங்குபவை.போதை கும்பலால் பங்க் ஊழியர்கள் மட்டுமல்லாமல் மக்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. குற்றவாளிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். பெட்ரோல் பங்க்குகளின் பாதுகாப்பை உறுதி செய்ய போலீஸ் ரோந்து பணியை அதிகரிக்க வேண்டும். பாதுகாப்பை உறுதி செய்ய முடியவில்லை எனில், ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் நடத்தப்படும். கோரிக்கை மனு தமிழக முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# "முதல்வர் விஜய்யின் இயலாமை தற்போதுதான் வெளிப்படுகிறது" அப்பாவு விமர்சனம்

நெல்லை, ஜூன்.5-

"முதல்வர் பணி ஏதோ 6 மணி நேரம் ஷூட்டிங் முடிந்ததும் வீட்டுக்கு சென்று ஓய்வு எடுப்பது போன்று கிடையாது. 24 மணி நேரமும் பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டும். முதல்வர் விஜய்யின் இயலாமை தற்போதுதான் வெளிப்படுகிறது'' என முன்னாள் சபாநாயகர் அப்பாவு விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "தமிழக முதல்வர் கையில்தான் காவல் துறை, உள்துறை உள்ளது. இந்தப் பணி ஏதோ 6 மணி நேரம் ஷூட்டிங் முடிந்ததும் வீட்டுக்கு சென்று ஓய்வு எடுப்பதுபோன்ற பணி கிடையாது. 24 மணி நேரமும் பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

கரூரில் இவர் பங்கேற்ற கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்துவிட்டனர். ஆனால் அவர் தனி விமானம் மூலம் வீட்டுக்கு வந்துவிட்டார். ஆனால் அப்போதைய முதல்வர் இரவோடு இரவாக அனைத்து உதவிகளையும் செய்தார். தற்போதைய முதல்வரால் இதுபோன்ற பணிகளை செய்ய முடியவில்லை என்றால், உள்துறையை தனது அமைச்சரவையில் யாருக்காவது கொடுத்துவிடலாம். வேண்டுமென்றால் ஒப்புக்கு சப்பாக ஒரு துறையை கையில் வைத்துக் கொள்ளலாம். பெண்கள், குழந்தைகள் மற்றும் சட்டம் ஒழுங்குகளை காக்கும் பணி ஒரு நாட்டின் முதல்வருக்கு கட்டாயம் உள்ளது. அதை மறைப்பதற்காக, அவர் பொறுப்பேற்ற நாள் முதல் இது பல மடங்கு பெருகி வருவதால் அவர் மற்றவர்கள் மேல் பழி போடுகிறார். இது இயலாமையின் வெளிப்பாடு. எந்த முதல்வராவது 'எனக்கு வாயில் நல்லா வருது' என சொல்வார்களா?

அந்த அல்லு சில்லு கட்சியில்தான், 25 நபர்களை ஓட்டு போட வைக்க, புஷ்பா பட பாணியில் சோஃபா செட்டை முன்னர் அனுப்பிவிட்டு அவரும் சென்றார். அவர்கள் அனைவரும் தற்போது புலம்புகிறார்கள். 8 அமைச்சர் பதவி தருவதாக சொல்லிவிட்டு, தற்போது எங்களை ரோட்டில் விட்டுவிட்டனர் என சொல்கிறார்கள். இது உண்மையா என தவெகவிடம் கேளுங்கள். எம்ஜிஆர் ஆரம்பித்த கட்சியையே காலி செய்துவிட்டனர்.மக்களின் கோரிக்கையை ஏற்று, முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அம்பா சமுத்திரம் தொகுதியில் நிற்க வேண்டும். அண்ணா, காமராஜர் போன்றவர்கள் அனைவரும் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளனர். இதை மிகப் பெரிய பாதிப்பு என சொல்லிவிட முடியாது. ஐந்து தொகுதியில் தற்போது தேர்தல் வரவிருக்கிறது. மு.க.ஸ்டாலின் சுட்டிக் காட்டும் நபர் தான் வெற்றி பெறுவார். முதல்வர் விஜய்யின் இயலாமை தற்போது தான் வெளிப்படுகிறது'' என்று அவர் கூறினார்.

# "50 இடங்களில் எழும் கலைஞர் நாமம்!" தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் 103வது பிறந்தநாள் கொண்டாட்டம்!

தென்காசி, ஜூன்.5-



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி மற்றும் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 50க்கும் மேற்பட்ட இடங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வுகள் வெகுவிமரிசையாக நடைபெற்றன.

தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் வே. ஜெயபாலன் மற்றும் தற்போதைய தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலைக்கதிரவன் ஆகியோர் பல்வேறு இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நேரில் கலந்துகொண்டு, கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விழாவின் ஒரு பகுதியாக, பொதுமக்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களுக்கு இனிப்புகள் வாரி வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டதுடன், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

சமூகநீதி, சுயமரியாதை மற்றும் மக்கள் நலன் ஆகிய கொள்கைகளை வாழ்நாள் முழுவதும் முன்னெடுத்துச் சென்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தொடர்ந்து மக்கள் பணியாற்றுவோம் என்ற உறுதிமொழி இந்நிகழ்வுகளில் வலியுறுத்தப்பட்டது. இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சித் தலைவர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் திரளாகக் கலந்து கொண்டனர்.

## திருவனந்தபுரத்தில் இட்லி, தோசைக்கு கஞ்சா சட்னி

# அடுக்குமாடி குடியிருப்பில் கஞ்சா தோட்டம் உருவாக்கிய ஐடி மேனேஜர்

திருவனந்தபுரம், ஜூன்.5-



திருவனந்தபுரத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் கஞ்சா தோட்டம் அமைத்திருந்த ஐடி நிறுவன மேனேஜரை போலீசார் கைது செய்தனர். இவர் கஞ்சாவை பாலில் அரைத்துக் குடித்ததாகவும், இட்லி, தோசைக்கு தொட்டுக்க சட்னியாக பயன்படுத்தியதாகவும் போலீசில் வாக்கு மூலம் அளித்துள்ளார்.கேரளத்தில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டை தடுக்க ஆபரேஷன் தூஃபான் என்ற பெயரில் போலீசார் அதிரடி சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் திருவனந்தபுரம் ஸ்ரீகாரியம் அருகே ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் கஞ்சா தோட்டம் இருப்பதாக ஸ்ரீகாரியம் போலீசுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து போலீசார் அப்பகுதியில் ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.இதில் ஐடி நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் வசித்து வரும் அடுக்குமாடி குடியிருப்பில் கஞ்சா தோட்டம் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து போலீசார் அந்த குடியிருப்பில் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். இதில் அங்கு 70 செடிகள் அடங்கிய ஒரு கஞ்சா தோட்டம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அந்த குடியிருப்பில் வசித்து வந்த அரியானா மாநிலத்தைச் சேர்ந்த விஷால் (26) என்ற வாலிபரை போலீசார் கைது செய்தனர். இவர் திருவனந்தபுரம் டெக்னோ பார்க்கில் உள்ள ஒரு ஐடி நிறுவனத்தில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறார். இவரிடம் நடத்திய விசாரணையில் பல்வேறு ருசிகர தகவல்கள் கிடைத்தன. விஷால் ஒன்றரை லட் சம் சம்பளம் வாங்கி வருகிறார். இளம் வயதிலேயே கஞ்சாவுக்கு அடிமையான இவர், விலை கொடுத்து வாங்க விருப்பம் இல்லாமல் தன்னுடைய குடியிருப்பிலேயே கஞ்சாவை வளர்த்து வந்துள்ளார்.தன்னுடைய சொந்த தேவைக்காகவே இவர் இதை வளர்த்து வந்தார். செடி ஓரளவு வளர்ந்து பக்குவம் அடைந்ததும் அதை பறித்து பாலில் அரைத்து குடித்து வந்துள்ளார். சில சமயங்களில் இட்லி, தோசைக்கு கஞ்சா இலைகளை அரைத்து சட்னியாக வும் பயன்படுத்தி வந்துள்ளார். தன்னுடைய மாநிலமான அரியானாவில் கஞ்சா வளர்ப்பது ஒரு குற்றமே கிடையாது. அதேபோலத்தான் கேரளத்திலும் கஞ்சா வளர்ப்பதை போலீசார் கண்டு கொள்ளமாட்டார்கள் என்ற கருதி செடிகளை வளர்த்து வந்ததாக அவர் போலீசிடம் தெரிவித்தார். அனைத்து கஞ்சா செடிகளையும் கைப்பற்றிய போலீசார் விஷாலிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்



# தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்துக்கு பிரத்யேக இணையதளம்

## அமைச்சர் முகமது பர்வேஸ் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூன்.5-

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்துக்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள புதிய இணையதளத்தை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ் தொடங்கி வைத்தார்.தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் கடந்த 1973ம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது சென்னை அம்பத்தூரில் இயங்கி வருகிறது. இங்கு தொழிலாளர் மேலாண்மையில் பிஏ, எம்ஏ மற்றும் முதுநிலை டிப்ளமா படிப்புகள் நடத்தப்படுகின்றன.கடந்த 2001 முதல் முழுநேர மற்றும் பகுதிநேர ஆராய்ச்சிப் படிப்பு (பி.எச்டி) மேற்கொள்வதற்கான ஆராய்ச்சி நிலையமாகவும் இந்த கல்வி நிலையத்தை சென்னை பல்கலைக்கழகம் அங்கீகரித்துள்து.தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக ஆய்வாளர்கள் ஆகியோருக்கு கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகளையும் இந்த நிறுவனம் நடத்தி வருகிறது.இந்த கல்வி நிலையத்தால் நடத்தப்படும் படிப்புகள், பயிற்சி வகுப்புகள், ஆராய்ச்சி செயல்பாடுகள், சேர்க்கை தொடர்பான தகவல்கள், அறிவிப்புகள் மற்றும் பிற கல்வி நிலைய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை மாணவர்கள், பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில், https://tils.tn.gov.in என்ற புதிய இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த இணையதளத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று தொடங்கி வைத்தார்.இந்த நிகழ்வில் துறைச் செயலர் கொ.வீரராகவ ராவ், தொழிலாளர் நலத் துறை கூடுதல் ஆணையரும், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் இயக்குநருமான கோ.சசிகலா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கேரள மாநிலத்தின் கடன் ரூ.5.07 லட்சம் கோடி சட்டப்பேரவையில் வெள்ளை அறிக்கை தாக்கல்

திருவனந்தபுரம், ஜூன்.5-



கேரள மாநிலத்தின் கடன் ரூ.5.07 லட்சம் கோடி என்றும், கடன் அல்லாத நிலுவை பொறுப்புகள் ரூ.48,733 கோடி என்றும் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி ஆட்சியை இழந்தது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. முதல்வராக வி.டி. சதீசன் பொறுப்பேற்றார்.

முதல்வரான பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், கேரள மாநிலத்தின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என அறிவித்தார். அதன்படி, நிதி நிலை குறித்த வெள்ளை அறிக்கை கேரள சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

வெள்ளை அறிக்கையில் இடம்பெற்றுள்ள விவரங்கள்: கேரள மாநிலத்தின் மொத்த பொதுக்கடன் ரூ.5.07 லட்சம் கோடி. மாநிலத்தின் வருவாயில் 77% சம்பளம், ஓய்வூதியம், வட்டி செலுத்துதல் போன்றவற்றுக்கே செலவிடப்படுகிறது. இதனால், வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி மிகவும் குறைந்துவிட்டது. மாநிலம் மிக அதிக அளவிலான நிதிப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது.

இதன் காரணமாக மூலதனச் செலவினங்கள் நாட்டின் மிகக் குறைந்த அளவாகவே நீடிக்கிறது. இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சதவீதம் மட்டுமே. அதோடு, அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு வழங்க வேண்டிய அகவிலைப்படி (ஞிகி) மற்றும் அகவிலை நிவாரண (ஞிஸி) நிலுவைகள் உட்பட மொத்தம் ரூ.48,733 கோடி அளவுக்கு நிலுவை பொறுப்புகளை புதிய அரசு ஏற்றுள்ளது.

கேரள உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியம் ரூ.21,000 கோடி அளவிலான நிலுவைக் கடன் பொறுப்புகளைக் கொண்டுள்ளது. கேரள பொதுத்துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்த இழப்பு ரூ.78,851 கோடியாக உயர்ந்துள்ளது. கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம், கேரள குடிநீர் வாரியம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களே இந்த உயர்வுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

எஸ்சி, எஸ்டி, பிசி, சிறபான்மையினர் ஆகியோரின் நலன்களுக்கான திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி சமீப ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் சரிந்துள்ளது. மேலும், எதிர்பார்த்ததைவிட குறைவாகவே மாநில வரி வருவாய்கள் ஈட்டப்பட்டுள்ளன. மத்திய அரசிடம் இருந்து கிடைக்கும் நிதியுதவியும் குறைந்துள்ளது. மாநிலத்தின் நிதி நெருக்கடிக்கு இவை முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

சவால்கள் அதிகரித்துள்ள போதிலும், தனியார் முதலீடுகளை ஈர்ப்பது, தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பது, வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவது ஆகிய துறைகளில் தொடர் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் கேரளத்தின் நிதி சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியும். இவ்வாறு அந்த வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ளை அறிக்கை குறித்துப் பேசிய முதல்வர் வி.டி. சதீசன், "மாநிலத்தின் நிதிநிலை குறித்த உண்மையென நிலையை அறிந்துகொள்ளும் உரிமை கேரள மக்களுக்கு உண்டு. இந்த ஆவணத்தில் இடம்பெற்றுள்ள தகவல்கள் ஏற்கனவே பொதுவெளியில் கிடைக்கக்கூடியவையே. இந்த வெள்ளை அறிக்கையை தயாரித்தது நிதித்துறையே. கடந்த காலங்களில் வெள்ளை அறிக்கைகள், அரசியல் ஆவணங்களாகவே இருந்தன. ஆனால், இந்த வெள்ளை அறிக்கை அப்படி அல்ல. நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணம், கேரளத்தின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கான ஒரு வரைபடமாகச் செயல்படும்'' என தெரிவித்தார்.

அதேநேரத்தில், இது ஒரு அரசியல் ஆவணமே என எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் முதல்வருமான பினராயி விஜயன் விமர்சித்துள்ளார். "இந்த ஆவணம் ஒரு அரசியல் ஆவணமாகவே உள்ளது. இங்குள்ள முக்கிய பிரச்சினை நிபுணர்களிடம் ஆலோசனை பெறுவது பற்றியதல்ல. மாறாக, இந்த வெள்ளை அறிக்கையானது முறையான நிறுவன வழிமுறைகளின் வாயிலாக தயாரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதே ஆகும். ஆனால், இதில் அத்தகைய நடைமுறை பின்பற்றப்படவில்லை'' என பினராயி விஜயன் தெரிவித்தார்.



## ராக்கியாபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் தேங்கிக் கிடந்த குப்பைகள் அகற்றம்

அவிநாசி, ஜூன்.5-
திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஒன்றியம், திருமுருகன்பூண்டி நகராட்சிக்குட்பட்ட ராக்கியாபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியின் உட்புறம் மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் மர இலைகள், குப்பைகள் மற்றும் கழிவுகள் தேங்கிச் சுகாதாரமற்ற சூழல் நிலவி வந்தது. இதனால் மாணவர்களின் உடல்நலம் மற்றும் கல்விச் சூழல் பாதிக்கப்படும் அபாயம் இருந்தது. இதனைக் கண்டித்து, கடந்த 02.06.2026 அன்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் (DYFI) அவிநாசி ஒன்றியம் சார்பில், ஒன்றிய செயலாளர் வடிவேல் மற்றும் ஒன்றிய தலைவர் சந்தோஷ் குமார் ஆகியோர் திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையரிடம் பள்ளி வளாகத்தை உடனடியாகச் சுத்தம் செய்து, சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளக் கோரி அதிகாரப்பூர்வமாக மனு அளித்திருந்தனர். இந்த மனுவின் அதிரடி எதிரொலியாக, நகராட்சி நிர்வாகம் உடனடியாகக் களமிறங்கி ராக்கியாபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் தேங்கிக் கிடந்த குப்பைகள், மர இலைகள் மற்றும் கழிவுகளைப் போர்க்கால அடிப்படையில் அகற்றி, முழுமையான தூய்மைப்பணியை மேற்கொண்டுள்ளது. DYFI அமைப்பின் இந்த உடனடி மக்கள் நல முயற்சிக்கும், நகராட்சி நிர்வாகத்தின் விரைவான நடவடிக்கைக்கும் பள்ளி நிர்வாகமும், பொதுமக்களும் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.



■ தென்காசி மாவட்டம், இலஞ்சி, ஐ.சி. ஈஸ்வரன் பிள்ளை தொடக்கப் பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., மாணவர்களுக்கு வழங்கப்படும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை பார்வையிட்டு உணவின் தரத்தினை ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு அரசு பள்ளிகள் ஜீன் 4ஆம் தேதி திறக்கப்படும் என அறிவித்தது. மாணவர்களுக்கு சீருடை, பாடப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங்.இ.ஆ.ப. வாழ்த்துக்களை தெரிவித்தார். தொடர்ந்து பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் நட்டார். இந்நிகழ்வில், உதவித் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு. அ. குலோத்துங்கன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், புதுச்சேரி நகராட்சி ஆணையர் ஸ்ரீஜித், சுகாதாரப் பிரிவு இளநிலை பொறியாளர் பெ. கிருஷ்ணமூர்த்தி, கிரீன் வாரியர் அமைப்பின் துணைத் தலைவர் ஜெகதீசன் மற்றும் மின் வாரிய ஒருங்கிணைப்பு அதிகாரி லலித் ஆகியோர் அடங்கிய அதிகாரிகள் குழுவினர், இரவு 10.00 மணியளவில் புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் அதிரடி கள ஆய்வு மேற்கொண்டனர்.மேலும், போதிய சுகாதார ஊழியர்களையும் வாகனங்களையும் பயன்படுத்தி, புதுச்சேரி நகரம் முழுவதும் 24 மணி நேரமும் தூய்மைப் பணியைச் சீராக வைத்திருக்க உத்தரவிடப்பட்டது. குறிப்பாக, தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் தங்களின் பாதுகாப்பு உபகரணங்களான முகக்கவசம் மற்றும் கையுறை ஆகியவற்றை அணிந்துதான் கட்டாயம் பணியில் ஈடுபட வேண்டும் என ஆட்சியர் உத்தரவிட்டார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின் போது, இ.சேவை மையத்தில் மனுக்கள் பதிவு செய்ய வந்திருந்த பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஸ்குமார் உடன் உள்ளார்.

## மனங்களை இணைத்த ‘டிரீம்ஸ் இந்தியா’ நற்பணி! காட்டூர் கைலாஷ் நகரில் திரண்ட 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள்

திருச்சி, ஜூன்.5-
திருச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாபெரும் திருமண சுயவர நிகழ்ச்சி, கடந்த 30.05.2026 சனிக்கிழமை அன்று திருச்சி காட்டூர் கைலாஷ் நகர் VM கல்யாண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மாபெரும் நிகழ்வினை Dreams India தன்னார்வத் தொண்டு நிறுவனம், திருச்சி லயன்ஸ் கிளப் மற்றும் சென்னை ராஜசேகர் கருணை இல்லம் நல அறக்கட்டளை ஆகியவை இணைந்து நடத்தியிருந்தன.
இந்நிகழ்ச்சிக்கு Dreams India தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் தலைவரும் சமூக ஆர்வலருமான A.G. மணி தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார். Human Rights and Social Justice Mission தமிழக மாநில சமூக நலச் செயலாளர், தமிழ் பிரஸ் கிளப் மாநில செயற்குழு உறுப்பினர் மற்றும் Dreams India நிறுவனத்தின் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் நி. பாலசுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார். Dreams India சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் ஞானசேகரன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாகத் திருச்சி மாவட்ட லயன்ஸ் கிளப் மற்றும் காட்டூர் லயன்ஸ் சங்கத் தலைவர் லயன் N. சங்கர், செயலாளர் T.R. தேவராஜன், பொருளாளர் T.A. முத்துக்குமார் மற்றும் சென்னை ராஜசேகர் கருணை இல்லம் நல அறக்கட்டளையின் இயக்குநர் சமூக சேவகி C. அமுதா சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினர். இவ்விழாவில் 200க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மிகுந்த நம்பிக்கையோடு கலந்துகொண்டனர். இந்த சுயவர நிகழ்வின் மூலம் முதற்கட்டமாக 4 ஜோடிகள் திருமணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கலந்துகொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டதுடன், காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்நிகழ்ச்சி மிகுந்த உற்சாகத்துடனும் சிறப்புடனும் நிறைவுற்றது.




## ஆட்டையாம்பட்டி ஸ்ரீ கோணப் பெருமாள் கோயிலில் மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேகம்!

### விழாவிற்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குச் சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது

சேலம், ஜூன்.5-
சேலம் மாவட்டம் ஆட்டையாம்பட்டியில் எழுந்தருளியிருக்கும் மிகப்பொலிவான அருள்மிகு "ஸ்ரீ கோணப் பெருமாள் திருக்கோயில்" புனருத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக பெருவிழா விறுவிறுப்பாக நடைபெற்றது.ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை, சதுர்த்தி திதி, உத்திராட நட்சத்திரம், சித்த யோகமும் நேத்திர ஜீவனும் கூடிய நலமிகு நன்னாளில் காலை 7:45 மணிக்கு மேல் 8:45 மணிக்குள் மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடத்தப்பட்டது. இப்புனித நன்நேரத்தில் ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ பாமா ருக்மணி சமேத வேணுகோபால்சாமி, ஸ்ரீ வேம்பியம்மன், ஸ்ரீ கோண அய்யனார், ஸ்ரீ புடவை காரியம்மன் ஆகிய ஆலய விமானங்களுக்கும், முன்னுடையார் ஸ்ரீ கருப்பனார், ஸ்ரீ வீரபத்திரர் உள்ளிட்ட பரிவார காவல் தெய்வங்களுக்கும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம், மஹா அபிஷேகம் ஆகியவை முறைப்படி நடைபெற்றன. தொடர்ந்து, விழாவின் முக்கிய ஆன்மீக நிகழ்வுகளான தசதானம், தச தரிசனம், கோ பூஜை மற்றும் மஹா தீபாராதனை ஆகியவை கண் கொள்ளாக் காட்சியாக அரங்கேறின. விழாவிற்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குச் சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது. இம்மாபெரும் கும்பாபிஷேகப் பெருவிழாவினை தர்மகர்த்தா தெய்வத்திரு. சி.கந்தசாமி அவர்களின் குடும்பத்தினர், C.K.ராமச்சந்திரன், C.K.R.ஜெகன், கோணான் குல வகையறா பங்காளிகள், மாமன் மைத்துனர்கள் மற்றும் சுற்றுவட்டார ஊர் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு பக்திப் பரவசத்துடன் சுவாமி தரிசனம் செய்து சிறப்பித்தனர்.





## கலெக்டரிடம் மனு

■ சேலம் அஸ்தம்பட்டி பகுதியில் பயங்கர குடும்ப மோதல் காரணமாக பணத்தையும் தராமல், கோர்ட் ஆர்டரையும் மதிக்காமல் ஏமாற்றும் மகன் கார்த்திக். கலெக்டரிடம் முறையிட்ட தந்தை ரத்தினவேலு.



■ தென்காசி மாவட்டத்தின் 7வது புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக ரஞ்சித் சிங் பதவி ஏற்றுக்கொண்டதையடுத்து, புளியங்குடி எஸ்.வீராசாமி செட்டியார் கல்வி குழுமங்களின் சார்பாக வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் எம்.இசக்கிமுத்து நேரில் சந்தித்து புத்தகத்தை பரிசாக அளித்து வரவேற்றார்.

## தென்காசியில் அரசுப் பேருந்தும் பள்ளி பேருந்தும் மோதி விபத்து

தென்காசி, ஜூன்.5-
தென்காசி வாசுதேவநல்லூர் அருகே அரசுப் பேருந்தும் தனியார் பள்ளி பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மாணவர்கள் உட்பட 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்கள் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்

## “அரசுப் பள்ளி சாம்பியன்களுக்குச் சொந்தச் செலவில் விமானப் பயணம்!” முன்னாள் எம்பி சௌந்தரராஜனின் மாஸ் அறிவிப்பு!

ராதாபுரம், ஜூன்.5-
திருநெல்வேலி மாவட்டம், செட்டிகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கடந்த கல்வியாண்டில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று, முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகளுக்கான பாராட்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை ஆசிரியர் டாக்டர் பேசில் கஹாரின் தலைமை தாங்கினார். விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சௌந்தரராஜன் கலந்துகொண்டு, அதிக மதிப்பெண்கள் பெற்று பள்ளிக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்த மாணவர்களை மனமாரப் பாராட்டி, பரிசுத்தொகை மற்றும் நினைவுக்கேடயங்களை வழங்கி கௌரவித்தார். தொடர்ந்து விழாவில் பேசிய அவர், "அரசுப் பள்ளி மாணவர்கள் தனித்திறமையுடன் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகின்றனர்; கல்வி மட்டுமே வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய வழிகாட்டும்" என்று பேசினார். மேலும், மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக, ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றவர்களையும், 95 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களையும் 2 நாட்கள் இன்பச் சுற்றுலா அழைத்துச் செல்வதாக அறிவித்தார். அதன் சிகரமாக, 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகளைத் தனது சொந்தச் செலவில் விமானம் மூலம் சென்னைக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள முக்கிய இடங்களைப் பார்வையிட இன்பச் சுற்றுலா ஏற்பாடு செய்து தருவதாக அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். முன்னாள் எம்பியின் இந்த நெகிழ்ச்சியான அறிவிப்பை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலத்த கைதட்டல்களுடன் வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவச் சங்க நிர்வாகிகள் வசந்தி, குமரேசன், ஏசுதுரை, சுயம்புதுரை, பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் லிங்கதுரை, குமாரவேலாயுதம், ராமலிங்கம், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் சுவாமிநாதன், முத்துராஜ், பொன்னையா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனத் திரளானோர் கலந்து கொண்டனர். விழாவின் நிறைவாக நல்லாசிரியர் ஜேசு நன்றி உரையாற்றினார்.






■ மதுரை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அலுவலக செயல்பாடுகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000